செய்தி வெளியீடு எண்:01 நாள்: 01.12.2020

***தேனி மாவட்டம்***
***உலக எய்ட்ஸ் தினம்***
***பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் ஊக்கத் தொகையினை வழங்கினார்:-***

தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி வளாகத்தில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு மாவட்ட எய்ட்ஸ் மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் இன்று (01.12.2020) நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகையினை வழங்கி தெரிவித்ததாவது,

உலக எய்ட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி / எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் புதிய கருத்துகளை மையமாக கொண்டு இந்த நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், 2020-ஆம் ஆண்டிற்கு "உலகளாவிய ஒற்றுமை / பொறுப்பை இப்பேரிடர் காலங்களில் பகிர்ந்து கொள்ளுதல்" என்ற கருத்தினை மையமாக கொண்டுள்ளது.

தமிழக அரசு 2010 முதல் எச்.ஐ.வி/எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட நபர்களின் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவ பராமரிப்பு செலவிற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி உதவி அளித்து வருகிறது. அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் 2019-2020-ஆம் நிதியாண்டில் 169 குழந்தைகளுக்கு ரூ.4.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி / எய்ட்ஸின் பாதிப்புகள் குறித்து தொண்டு நிறுவனங்கள் மற்றும் வாகனத்தின் மூலம் துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கும் பணி, எச்.ஐ.வி / எய்ட்ஸின் தொடர்பான சந்தேகங்களுக்கு கைபேசி, தொலைபேசி வாயிலாக ஆலோசனைகள் வழங்கும் பணி, ஐயம் தவிர் என்ற கைபேசி செயலி, கையெழுத்து இயக்கம் போன்ற பல்வேறு பணிகள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு பணியில் 17 நம்பிக்கை மையங்கள், 30 துணை நம்பிக்கை மையங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மையங்கள் மூலம் இந்த ஆண்டு கர்ப்பிணி தாய்மார்கள் 20,852 பேருக்கும், பொது பிரிவில் 99,978 பேருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, எச்.ஐ.வி / எய்ட்ஸ் அறிகுறி கண்டறியப்பட்டவர்கள் ஏ.ஆர்.டி கூட்டு மருத்துவ சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாவட்டத்தில் எச்.ஐ.வி / எய்ட்ஸின் பாதிப்புக்கு முக்கிய காரணமாக இருக்கின்ற பால்வினை நோயினை தடுக்கும் விதமாக மாவட்டத்தில் 5 சுகவாழ்வு மையங்களும், இரத்த பரிமாற்றம் மூலம் பரவுதலை தடுப்பதற்காக இரண்டு இரத்த வங்கிகளும், நகர்புறத்தில் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பதற்கு இலக்கு மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கும் இலக்கு மக்களுக்கான திட்டமும், கிராமப்புறங்களில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பதற்கு தொடர்பு பணியாளர் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொடர்பான ஒதுக்குதல் / கரைப்படுத்துதல் மற்றும் பாதிக்கதப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற சட்ட ரீதியான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு இலவச சட்ட உதவி மையமும், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவும் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், எச்.ஐ.வி. உள்ளோர் கூட்டமைப்பும், இளைப்பாறும் மையமும் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் அனைவரும் ஒருங்கிணைந்து எச்.ஐ.வி / எய்ட்ஸ் இல்லாத சமுதாயமாக்க பாடுபட வேண்டும் என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உலக எய்ட்ஸ் தின உறுதிமொழியினை மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர். மேலும், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமபந்தி போஜனம் விருந்தில் மாவட்ட ஆட்சிததலைவர் அவர்கள் கலந்து கொண்டு உணவருந்தினார்.

இந்நிகழ்வில், தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை முதல்வர் மரு.எம்.இளங்கோவன், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு. எஸ்.லெட்சுமணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.எஸ்.செந்தில்குமார், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகின் திட்ட மேலாளர் சா.முகம்மது பாரூக், மாவட்ட திட்ட மேற்பார்வையாளர் கோ.வைரவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**